**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை**

# வெற்றிடங்கள்

இலங்கையின் முன்னணி மற்றும் விசாலமான விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை முகாமைத்துவம் செய்யும் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் மனித மற்றும் பௌதிக வளத்தை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்காக மேலான தலைமைத்துவம் மற்றும் ஆற்றல்களைக் கொண்ட, அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த நிபுணர்களிடமிருந்து பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிப்பாளர் (MM 1-1) - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**(அ) கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / அரச நிர்வாகம் / அரச முகாமைத்துவம் / மனிதவள முகாமைத்துவம் / வர்த்தகம் அல்லது பதவிக்கு இயைபான விடயத்துறையில் வேறேதாவது பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

பதவிக்கு இயைபான விடயத்துறையில் முதுமாணிப் பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனமொன்றில் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' இயைபுடைய துறைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

''முகாமைத்துவ'' சேவை வகுதியின் (MM 1-3) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் இயைபான துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அத்துடன்**

பல்சாரிய கடமைகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமை தாங்குவதோடு ஏனைய மனித வளங்களை வினைத்திமையுடன் முகாமைத்துவம் செய்வதில் குறிப்பிடத்தக்க தேர்ச்சி

**சம்பள அளவு** : HM 1-1 - ரூபா (140,640.00 – 15x4,100 – 202,140.00)

**வயதெல்லை** : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்** : முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், மேற்கூறிய சம்பள அளவிற்கான உரிமைத்துவம் நியமன நாள் முதல் செயற்படுத்தப்படும். மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் சம்பள உயர்வின் பிரகாரம் குறித்த நியமனம் ஒரு வருடத்திற்கு அந்தப் பதவிக்குரித்தான சம்பளம் சகிதம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

அதிகூடிய தகுதி மற்றும் துறையின் அனுபவத்தின் பிரகாரம் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் என்பதுடன் நேர்முகத் தேர்வில் வினைத்திறனின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**நியமனத்தின் தன்மை:**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதமான நியமனமாகும்.

**ஆட்சேர்க்கப்படும் முறை:**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் தகுதிகளை மதிப்பிடும் நேர்முகத் தேர்வில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படுவர். இந்தத் தகுதி மதிப்பீட்டு நேர்முகத் தேர்வு, முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் புள்ளிகள் வழங்கும் முறைக்கு அமைவாக இடம்பெறும்.

**பொதுவான தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள்**

- இலங்கைப் பிரஜைகளாகவிருக்க வேண்டும்.
- தற்போது அரச சேவையில் அல்லது அரசு சார்ந்த சேவையில் இருப்பவர்கள் நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.
- பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடன் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவம் மற்றும் அனைத்து கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் தாமே சான்றுபடுத்தி 2026-07-13ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவத்தின் மாதிரியை சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதியின் https://snsca.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**த.பெ. இல. 2211, ஆர்தர் த சில்வா மாவத்தை, கொழும்பு-13.**

**தொலைபேசி இல.**
**011 2445677, 011 2384385**